# பத்திரிக்கை செய்தி

தேனி மாவட்டத்தில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 31 சத்துணவு அமைப்பாளர் பணியிடங்கள் மற்றும் 155 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடி நியமனங்கள் மூலம் நிரப்பப்பட உள்ளதால் விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மற்றும் நகராட்சி ஆணையாளர் அலுவலகங்களில் 10.08.2016 தேதி பிற்பகல் 3.00-க்குள் விண்ணப்பிக்கலாம் என்று தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ந.வெங்கடாசலம் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

காலிப்பணி இடங்கள் மற்றும் இனசுழற்சி சம்மந்தமாக சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அல்லது நகராட்சி அலுவலக விளம்பரப்பலகையில் விளம்பரப்படுத்தபட்டுள்ளதை பார்த்து தெரிந்து கொள்ளலாம். சத்துணவு அமைப்பாளர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள்

அமைப்பாளர் பணியிடத்திற்கு பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். பழங்குடியினர் (ST) எட்டாவது தேர்ச்சி / தோல்வி பெற்றிருக்க வேண்டும். 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும். வயது 01.07.2016-ந் தேதி அடிப்படையாகக் கொண்டு எடுத்துக் கொள்ளப்படும். சத்துணவு சமையல் உதவியாளர் பணியிடத்திற்கு 5-ம் வகுப்பு தேர்ச்சி (அ) தேர்ச்சி பெறாதவர். பழங்குடியினருக்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

கல்வித்தகுதி, வயது, இருப்பிடம், சாதி மற்றும் முன்னுரிமை சம்மந்தமான ஆவணங்களான ஆதரவற்ற விதவை, கலப்புத் திருமணம் மேற்கொண்டவர், முன்னாள் இராணுவத்தினர் / ராணுவத்தில் பணிபுரிந்தவர்களின் சார்ந்தோர், பர்மா / இலங்கை அகதிகள், அரசுக்கு நிலம் அளித்தவர்கள், தமிழ்மொழி காவலர்களின் குடும்பங்கள், முன்னாள் மக்கள்தொகை கணக்கு எடுப்பு பணியில் ஈடுபட்டவர்கள், விடுதலை போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்கள் தகுதிகளுக்கு ஆதாரமாக நகல்களை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் என தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

22/7/16

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
மா.ஆ.த.நே.மு.உ.(சத்துணவு),
தேனி.